# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

முறையீட்டு மனு எண்: 07/2017/மா

ஆணை எண்: 238/2017

நாள்: 23/09/2017

**திரு. M. குமரன்,**
**சைதாப்பேட்டை,**
**சென்னை.** — **முறையீட்டு மனுதாரர்**

**1. திரு. அசோக் சுதாகர், உதவி பொறியாளர்**
**2. திரு. H. முருகன், செயற் பொறியாளர்**
**மண்டலம் – 10, சென்னை மாநகராட்சி.** — **எதிர் மனுதாரர்கள்**

சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை, கிழக்கு ஜோன்ஸ் சாலை கதவிலக்கம் எண்.34/66ல் வசித்து வரும் திரு. M. குமரன் அவர்களின் 17.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 18.01.2017 அன்று பெறப்பட்டு, 07/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. எதிர் மனுதாரர்கள் மற்றும் மண்டல உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் உதவி வருவாய் அலுவலரின் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை மாநகராட்சி, மண்டலம் – 10, சைதாப்பேட்டை, பிளாக்–37, கிழக்கு ஜோன்ஸ் ரோடு, கதவிலக்கம் எண்.34/66ல் வசிக்கும் திரு. M. குமரன் என்பவர், தான் உரிய அனுமதி பெற்று

பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடத்தை 2014ம் ஆண்டு கட்டியதாகவும் அக்கட்டடம் திட்ட அனுமதி மற்றும் விதிகளுக்கு முரணாக கட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்து, நடவடிக்கை எடுக்காமலிருக்க ரூ.5 லட்சம் கையூட்டு கோரியதாகவும், கையூட்டு தர மறுத்த நிலையில் திடீரென்று 28.11.2016 அன்று எவ்விதமான அறிவிப்புகள் வழங்காமலும் நடைமுறைகளைக் கடைப் பிடிக்காமலும் தனது வீட்டைப் பூட்டி முத்திரை (சீல்) வைத்தனர் என்றும் இது ஒரு நிர்வாக சீர்கேடு என்றும், எதிர் மனுதாரர்களின் செய்கையால் தமக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், வியாபார ரீதியாக பாதிப்பு அடைந்துள்ளதாகவும் தெரிவித்து, முத்திரையிடப்பட்ட வீட்டின் முத்திரையை அகற்றித் தருமாறும், விசாரணை மேற்கொண்டு நீதி வழங்கக் கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) முறையீட்டாளியின் புகார் குறித்து 1வது மற்றும் 2வது எதிர்மனுதாரர்கள் 16.02.2017 அன்று விசாரணை செய்யப்பட்டனர். விசாரணையின் போது மனுதாரர் கூறியுள்ள இடத்தில் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் KNN ரெசிடென்சி என்ற பெயரில் 20 அறைகள் கொண்ட தங்கும் விடுதி உள்ளதென்றும் மற்றும் 3வது, 4வது, 5வது தளத்தில் அவரது வீடு உள்ளது என்றும் தெரிவித்தனர். மேலும் வரைபடத்தின்படி கார் நிறுத்துவதற்கான தரைத் தளத்திற்கும், அதற்கு மேல் 1வது மற்றும் 2வது தளம் கட்டுவதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும், விதிமுறைகளுக்கு மாறாக 3 மாடிகளை கட்டியுள்ளார் என்றும் எனவே விதிகளை மீறிக் கட்டடம் கட்டியதற்காக மாநகராட்சி கட்டடம் விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், அவரிடம் எந்த பணமும் கேட்கவில்லை என்றும், அவருக்கும் தங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளவை எதுவும் புதிய கட்டிடங்கள் அல்ல என்றும் அனைத்தும் மிகவும் பழமையான கட்டிடங்கள் என்றும் தெரிவித்தனர்.

3) சென்னை மாநகராட்சி 10-வது மண்டல உதவி வருவாய் அலுவலர் 10.4.2017 அன்று விசாரிக்கப்பட்டார். அவர் விசாரணையின் போது, மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் தரைத்தளம் மற்றும் 5 தளங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும், 03.08.2015 முதல் கட்டிடம் கட்டுபவர்கள் மாமன்றத் தீர்மானத்தின்படி அவர்கள் அளிக்கும் சுய மதிப்பீட்டின்படி சொத்து வரி விதிப்பு செய்யலாம் என்பதால் 3 தடவை வரி விதிப்பு தீர்மானிக்கச் சென்றிருந்த பொழுது உரிமையாளர் இல்லை எனத் தடுத்து நிறுத்திவிட்டதாகவும், 10 தினங்களில் இது குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார். பின்னர், தமது 20.4.2017 நாளிட்ட அறிக்கையில், வரி மதிப்பீட்டாளர்கள் மற்றும் உதவி வருவாய் அலுவலர் மனுதாரரின் முன்னிலையில் கட்டிடத்தை கள ஆய்வு செய்து தரைத்தளம் மற்றும் நான்கு தளங்களின் கட்டட அளவீடு செய்யப்பட்டு, கட்டட அளவு மற்றும் உபயோகத் தன்மை மனுதாரரிடமிருந்து பெறப்பட்டதாகவும் தெரிவித்தார். விசாரணையின் போது நகர்ப்புற வீட்டு வசதி வளர்ச்சித் துறை அரசுச் செயலரின் 18.01.2017 கடித நகலினை ஆஜர் செய்தார். நகர்புற வளர்ச்சி விதிகளுக்கு உட்பட்டு, விதிகளுக்கு முரணாக கட்டப்பட்ட கட்டடப் பகுதிகளை, ஆறுமாத கால அவகாசத்திற்குள் முறைப்படுத்த மனுதாரர் உறுதி அளிக்கும் நிலையில் முத்திரையினை அகற்ற 18.1.2017 நாளிட்ட நகர்புற வளர்ச்சி (ம) வீட்டு வசதித் துறைச் செயலர் அவர்களின் கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் மற்றும் மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட கட்டிடத்தை அகற்றக்கோரி திரு. எம். அக்தர்பாஷா என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 30066/2016 எண்ணிட்ட நீதிப்பேராணை நிலுவையிலுள்ளதாகவும், சட்ட அலுவலரிடம் கருத்துரு பெற்று மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி மறுநிர்ணயம் செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

5) விசாரணை ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் திரு. M. குமரன் அவர்கள் குறிப்பிட்டுள்ள கட்டடம் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது. விதிகளுக்கு முரணாக கட்டப்பட்ட கட்டடத்தினை சென்னை மாநகராட்சி அலுவலர்களால் மூடி முத்திரையிட 17.8.2016ல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டடத்தினை மூடி முத்திரையிடும் அறிவிப்பு 09.09.2016ல் வழங்கப்பட்டுள்ளது. (Locking, Sealing and Demolition) 29.9.2016ல் De-Occupation Notice வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளினால் அவர் 20.9.2016ல் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளார். ஆனால் இந்த அனைத்து விபரங்களையும் மறைத்து, எதிர்மனுதாரர்கள் இருவரும் திடீரென்று மனுதாரரது கட்டிடங்களை 28.11.2016ல் மூடி, முத்திரையிட்டதாகவும், உண்மைகளை மறைத்து இம்முறைமன்றத்தில் முறையீடு செய்துள்ளார். பின்னர் 09.02.2017 நாளிட்ட தமது மனுவில் மன உளைச்சலில் புகார் கொடுத்ததாகவும், எதிர் மனுதாரர்கள் அவரிடம் பணம் கேட்கவில்லை என்றும், புகார் மனுவினைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. முறையீட்டாளர் 16.2.2017ம் தேதி நடைபெறவிருந்த விசாரணைக்கும் ஆஜராகவில்லை.

6) மனுதாரர் பொறுப்புள்ள ஒரு வணிகர். வழக்கு விசாரணைகளில் உரிமையியல் நீதிமன்ற நடைமுறைகளைப் பின்பற்றி தீர்ப்புரைகள் வழங்கும் இம்முறைமன்ற நடுவத்தின் முக்கியத்துவத்தினை உதாசீனப்படுத்தி சட்டத்திற்கு புறம்பாக விதிகளை மீறி கட்டிடம் கட்டி விட்டு உண்மைக்கு புறம்பான தகவல்களை/புகார்களாகத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீட்டு மனுவினை அனுப்பியும், பின் விலக்கிக்கொள்வதாக தெரிவிப்பதும் மனுதாரர் ஒரு தீய நோக்கத்துடன் தவறு செய்துவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக சுய நலத்திற்காக மட்டும் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளாரென தெள்ளத் தெளிவாக புலனாகிறது. விதிமுறைகளின்படி கடமையைச் செய்த மாநகராட்சி அலுவலர்கள் மீது உள்நோக்கத்துடன், உண்மைகளை மறைத்தும் ஆதார ஆவணங்கள் எதுவும் இல்லாமலும் இம்முறைமன்ற நடுவத்தில் ஊழல் புகார் தெரிவித்த மனுதாரரது செயலால், பொய்யான குற்றச்சாட்டுக்கு ஆளான மாநகராட்சி

அலுவலர்களின் மன உளைச்சல் அவர்களது நேரம் மற்றும் அன்றாட பணிகளை செய்வதற்கு குந்தகம் விளைவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் நேரம் வீணடிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் இதுபோன்ற செயல்பாடு கண்டிக்க வேண்டிய ஒன்றாகும். எனவே இம்முறையீட்டு மனுவினை பொருளற்ற புகார் என கருதி 2014–ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் பிரிவு 8 (2)ன் கீழ் செலவுத் தொகையாக மனுதாரர் ரூ.1000/– (ரூபாய் ஆயிரம்) மட்டும் எதிர்மனுதாரர்கள் பணியாற்றும் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

7) மனுதாரருக்கு விதிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட செலவுத் தொகையினை இவ்வாணை வெளியிடப்பட்ட **மூன்று மாத காலத்திற்குள்** மனுதாரரிடமிருந்து வசூலித்து சென்னை மாநகராட்சிக்குச் செலுத்தியும் அவ்விவரத்தை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கவும் சென்னை மாநகராட்சியின் 10வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் மேற்படி செலவுத் தொகையினை மனுதாரர் செலுத்தவில்லையெனில், அந்தத் தொகை 1864–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டத்தின்படி நிலவருவாய் பாக்கி இருந்தால் போன்று வசூலிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

சென்னை–600 032

03/10/17

3/10/17

பெறுநர்

1. திரு. எம். குமரன்,
எண்.34/66, கிழக்கு ஜோன்ஸ் ரோடு,
சைதாப்பேட்டை, சென்னை – 600 015. } பதிவஞ்சல் ஒப்புகையுடன்

2. திரு. அசோக் சுதாகர்,
உதவிப் பொறியாளர், மண்டலம் 10,
சென்னை மாநகராட்சி, என். எஸ். கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 24.

3. திரு. H. முருகன்,
செயற் பொறியாளர், மண்டலம் – 10.
சென்னை மாநகராட்சி, என். எஸ். கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

4. உதவி வருவாய் அலுவலர், மண்டலம் – 10.
சென்னை மாநகராட்சி, 117, என். எஸ். கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

5. மண்டல அலுவலர்,
மண்டலம் – 10,
சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

<u>நகல்:</u>

ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
ரிப்பன் பில்டிங்கஸ்,
சென்னை.

முறைமன்ற நடுவரின் நேர்முக உதவியாளர் – 1
இருப்புக்கோப்பு/உதிரி –2